Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 85

திங்கட்கிழமை
19 பெப்ரவரி 2024

மாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"உந்த வழக்குகளின் எண்ணிக்கையின்ர எத்தனை மடங்கை காசை வாங்கிக் கொண்டு விட்டிச்சினமோ தெரியேலையே"

# நிறைவேற்றதிகார ஒழிப்பு எதிரணியின் கட்டுக்கதையே!

## ஆளும் கட்சி உறுப்பினர்களை சமாதானப்படுத்திய ரணில்



கொழும்பு, பெப்ரவரி 19

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை குறுக்குவழியில் ஒழிக்கமுடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கவேண்டிய தேவையும் இப்போதில்லை. எதிரணியில் ஒரு பிரிவின் கட்டுக்கதை அது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

11

போக்குவரத்து விதி மீறல்

## யாழ்ப்பாணத்தில் ஒரு மாதத்தில் 5,227 வழக்குகள்

யாழ்ப்பாணம், பெப். 19

கடந்த டிசெம்பர் மாதம் 25ஆம் திகதியிலிருந்து ஜனவரி 25ஆம் திகதி வரையிலான ஒரு மாதத்துக்குள் யாழ்ப்பாணம் பிராந்தியப் பொலிஸ் நிலையங்களில் போக்குவரத்து விதிமீறல் தொடர்பில் 5 ஆயிரத்து 227 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பொலிஸாரினால் சுட்டிக்காட்டப்பட்டது.

11

## பொதுத்தேர்தல் விரைவில் நடப்பதற்கே சாத்தியம்

சம்பிக்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 19

நாட்டில் முன்கூட்டியே பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் உள்ளது. அந்தத் தேர்தலில் ராஜபக்சக்கள் மக்களால் முழுமையாகத் துடைத்தெறியப்படுவார்கள் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

11

## சிறுமியைக் கடத்தியதாக 21 வயது இளைஞன் கைது

யாழ்ப்பாணம், பெப். 19

15 வயதான பாடசாலைச் சிறுமியைக் கடத்திய குற்றச்சாட்டில் 21 வயதான இளைஞன் ஒருவனை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவு பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

11

6 மாதங்களின் பின்னர்

## ஐஸ், ஹெரோய்ன் நுகர்ந்த இளைஞன் உயிரிழப்பு

கூடச் சென்ற நண்பன் கைது

யாழ்ப்பாணம், பெப். 19

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞன் அதிலிருந்து விடுபட்டு 6 மாதங்கள் இருந்த நிலையில் மீண்டும் உயிர்கொல்லி ஐஸ் மற்றும் ஹெரோய்ன் என்பவற்றை நுகர்ந்தமையால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

11

## மின்கட்டணம் குறையும்

கொழும்பு, பெப். 19

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையிலான மின்கட்டணக் குறைப்புத் தொடர்பான கலந்துரையாடல்

11

## இந்திய மீனவர் அத்துமீறல்; துணைத்தூதரகம் முற்றுகை

நாளை செவ்வாய்க்கிழமை போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 19

இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய அத்துமீறிய மீன்பிடி தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் தமக்கான தீர்வைப் பெற்றுத்தருமாறு கோரி யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தை நாளை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட மீனவ அமைப்புகள் முடிவு செய்துள்ளன.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத்தில் இடம்பெற்ற ஊடகவிய

11

## குடும்பத்தலைவர் உயிர்மாய்ப்பு

போதைக்கு பணம் கொடுக்காததால் தவறான முடிவு

யாழ்ப்பாணம், பெப். 19

உயிர்கொல்லி போதைப்பொருள் நுகர்வதற்கு வீட்டார் பணம் வழங்காததையடுத்து இளம் குடும்பத் தலைவர் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார். மல்லாகத்தைச் சேர்ந்த 32 வயதான குடும்பத்தலைவரே இவ்வாறு உயிர்மாய்த்துள்ளார். அவர் 5 வயதான பிள்ளையின் தந்தையுமாவார்.

11

நீதிமன்றத்தின் மேற்பார்வையில்

## மூலக்கிளை முதல் தலைவர் தெரிவுவரை அனைத்தையும் மீள நடத்தத்தயார்!

சிறீதரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூலக்கிளையிலிருந்து அனைத்துக் கிளைகளினது தெரிவுகளும் நீதிமன்றத்தின் மேற்பார்வையில் முன்னெடுக்கப்பட்டு மீண்டும் தலைமைக்கான தேர்தலை நடத்துவதற்கும் நான் தயாராக இருக்கின்றேன் - இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டமை உள்ளிட்ட வழக்குகள் தொடர்பில் அவரிடம்

11

## 80 கிராம் ஐஸுடன் ஒருவர் கைது

வவுனியா, தம்பனைச்சோலையில் 80 கிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் ஒருவரை வவுனியா தலைமைப் பொலிஸ்நிலைய போதைத்தடுப்புப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர். (அ-ஒ-110-18)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வையற்றோர் வாக்களிக்க வசதி

கொழும்பு, பெப்.19
கட்புலனற்றோர் வாக்களிக்க விசேட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
வாக்களிப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் உதவியுடனேயே தற்போது அவர்கள் வாக்களித்து வருகின்றனர். புதிய திட்டத்தின்கீழ் 'பிரெய்லி' முறையில் அச்சிடப்பட்ட கட்சிகளின் பெயர்கள் மற்றும் வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய சீட்டு அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் தேர்தலில் கட்புலனற்றோர், தனித்து வாக்களிக்கும் உரிமையைப் பெறமுடியும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (எ-இ)



பிளமிங்கோ என அறியப்படும் வெளிநாட்டுக் கடற்பறவை இனங்கள் இலங்கைக்குத் தற்போது வலசை வந்துள்ளன. மன்னார் நீரேந்துப் பகுதிகளில் அவற்றை அதிகம் காணக்கூடியதாக உள்ளது. (ம-56)

## இலங்கை மீனவருக்கு 5 ஆண்டுகள் சிறை

கொழும்பு, பெப்.19
மியான்மரில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவருக்கு மியான்மர் நீதிமன்றம் 5 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.
எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை மீனவர்கள் 15 பேர் மியான்மர் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.
மீன்பிடிப் படகுகளைச் செலுத்திச் சென்ற இருவருக்கு 5 வருட சிறைத் தண்டனையும், மேலும் 13 இலங்கை மீனவர்களுக்கு 3 வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளதுஎன்றுமியான்மருக்கான இலங்கைத் தூதுவர் ஜனக பண்டார தெரிவித்துள்ளார்.
அதேநேரம் பொது மன்னிப்பின் கீழ் மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம் என்றும், மீனவர்கள் நலமுடன் இருக்கின்றனர் எனவும் தூதுவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மின்கட்டண குறைப்பு பிரேரணை மீளாய்வு!

கொழும்பு, பெப்.19
மின்சாரக் கட்டணக் குறைப்பு தொடர்பான பிரேரணையை மீளாய்வு செய்து சமர்ப்பிக்க வேண்டும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சாரசபைக்கு அறிவித்துள்ளது.
திருத்தப்பட்ட பிரேரணையை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் ஆணைக்குழுவிடம் கையளிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
கடந்த 15 ஆம் திகதி மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் இடம்பெற்ற மக்கள் கருத்துகளைக் கேட்டறியும் நடவடிக்கையின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# தலைமன்னார் – இராமேஸ்வரம் தொடர்பை பலப்படுத்த ஆய்வு!

### இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவிப்பு

**மன்னார், பெப். 19**
**தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் இருக்கின்ற தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்தமுடியும் என்பதை ஆராய்ந்து வருகிறோம் என்று இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

இந்தியாவின் ஏற்பாட்டில் மன்னார் மீனவர்களுக்கு உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
மன்னாருக்கு எனது முதலாவது பயணமாக இந்தப் பயணம் அமைந்துள்ளது. 2010 ஆம் ஆண்டுமுதல் இந்திய அரசாங்கம் இங்கு அமுல்படுத்தியுள்ள பல்வேறு திட்டங்கள் தொடர்பில் நான் ஆராய்ந்துள்ளேன். தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான தொடர்புகளை எவ்வாறு பயன்படுத்த முடியும், எவ்வாறு பலப்படுத்த முடியும் என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றேன்.
அதற்குத் தேவையான விடயங்கள் தொடர்பில் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன். மீனவ சமூகத்துக்குத் தேவையான உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப வசதிகள் தொடர்பிலும் மேற்கொள்ளவேண்டிய செயற்றிட்டங்கள் குறித்தும் நாம் கரிசனை கொண்டுள்ளோம் - என்றார். (ம-56)

## வலயக்கல்வி பணிப்பாளரை நியமிக்குக

யாழ்ப்பாணம், பெப்.19
தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்படாததால் வருட ஆரம்பத்தில் கல்விச்செயற்பாடுகளைத் தொடர்வதில் தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.
தென்மராட்சியிலுள்ள 59 பாடசாலைகளுக்கும் ஒரு கல்வி வலயமும் ஒரு கோட்டக் கல்வி அலுவலகமும் மட்டுமே உள்ளன. கடந்த வருடம் மார்கழி மாதம்வரை கடமையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் ஓய்வில் சென்ற பின்னர் இதுவரை வலயக் கல்விப் பணிப்பாளர்நியமிக்கப்படவில்லைஎன்றும் சுட்டிக்காட்டப்பட்டது. (ப-159)

# தகுதியான அனைவரையும் 'அஸ்வெசும' உள்ளீர்க்கும்

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19
'அஸ்வெசும' திட்டத்தில் வெளியாரின் தலையீடுகள் இன்றி தகுதியுடைய அனைவரும்உள்ளீர்க்கப்படுவார்கள் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான்சேமசிங்கதெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியுள்ளது.
'அஸ்வெசும' முதற்கட்டத்தை தவறவிட்டவர்கள் அனைவரும் இரண்டாவது கட்டத்துக்கு எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். இதற்கு விண்ணப்பிக்காத எவருக்கும் நலன்புரி நன்மைகள் கிடைக்காது. வெளியாரின் தலையீடுகள் இன்றி நலன்புரிக் கொடுப்பனவுகள் நலிவுற்றோரை சென்றடையும்- என்றார். (ச-இ)

## மதுபான உற்பத்தி கடந்தாண்டு வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 19
மதுபான உற்பத்தி கடந்த ஆண்டில் வீழ்ச்சியடைந்துள்ளது. நிதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அரச நிதி முகாமைத்துவ அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களிலும் மதுபான உற்பத்தி 13.4 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது.
கடந்த 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும்போது 2023 ஆம் ஆண்டில் நாட்டின் மதுவரி வருமானம் வீழ்ச்சியை பதிவுசெய்துள்ளது. கடந்த 2023 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட - எதிர்பார்க்கப்பட்ட வரி வருமானத்தில் 58 வீதம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# மதுவிற்பனை நிலையம் மீது வழக்குத் தொடரத் தீர்மானம்

கொழும்பு, பெப்.19
உடுப்பிட்டி, இமையாணன் மேற்கில் திறக்கப்பட்ட மது விற்பனை நிலையம் தொடர்பில் நீதிமன்றத்தை நாட உடுப்பிட்டியைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புகள் சில தீர்மானித்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
மக்களின் எதிர்ப்பை மீறி மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றும், அதையடுத்தே ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் ஊடாக நீதிமன்றத்தை நாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.
உடுப்பிட்டி வீரகத்தி விநாயகர் சனசமூக நிலைய முன்றிலில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் நடத்திய மக்கள் சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது. (எ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனை பெற்றோருக்கு எச்சரிக்கை!



போதை மாத்திரையை உட்கொண்டு, ஒவ்வாமை காரணமாக 4 மாணவர்கள் குருநாகல் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில்

கொழும்பு, பெப்.19

**பெற்றோரும், பாதுகாவலர்களும் சிறுவர்கள் முன்னிலையில் மது பானம் மற்றும் போதைப்பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது. போதைப்பொருள்களை சிறுவர்களின் பார்வையில் வைக்கக் கூடாது என்று சிறுவர் மருத்துவ நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா எச்சரித்துள்ளார்.**

ஒருவரின் தந்தை போதைக்கு அடிமையானவர். பெற்றோரும், பாதுகாவலர்களும் சிறுவர்கள் முன்னிலையில் போதைப்பொருள்களைப் பயன்படுத்தக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஆபாச குறுந்தகவல் இளைஞர் மறியலில்

கொழும்பு, பெப். 19

கையடக்கத் தொலைபேசியூடாக யுவதியொருவருக்கு ஆபாச குறுந்தகவல் அனுப்பிய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் வெயங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடையவராவார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தியபோது எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

## நடமாடும் மருத்துவசேவை நடத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.19

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேராவில், இளங்கோபுரம், வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், பாரதிபுரம் ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் மருத்துவ சேவை தொடர்பாகப் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர்.

இந்தக் கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் தமக்குரிய மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குப் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, தருமபுரம், கிளிநொச்சி போன்ற நீண்ட தூரங்களிலுள்ள மருத்துவமனைகளுக்குச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அதனால் இந்தக் கிராமங்களில், நடமாடும் மருத்துவ சேவையை நடத்துவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)

### யாழ்.மாவட்டத்தில்

## சட்டவிரோத மணல் அகழ்வு; இருமாதத்தில் 97 பேர் கைது

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்.பொலிஸ் பிரிவில் கடந்த டிசெம்பர் 25ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வுகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 97 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஒருவரும், சாவகச்சேரியில் 57 பேரும், கோப்பாயில் 6 பேரும், கொடிகாமத்தில் 33 பேருமே கைதாகினர். இது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 35 ஆகவும் பதிவாகியுள்ளது என்றும் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## சி.சி.ரி.வியில் சிக்கிய 793 சந்தேகநபர்கள்

கொழும்பு, பெப்.19

கொழும்பை அண்மித்த பகுதிகளில் குற்றச் செயல்களில் ஈடுபட்ட 793 சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புக் கமராப் பதிவுகளைக் கொண்டு இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனங்காணப்பட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக 300 பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (எ-இ)

## புலிகள் மீளுருவாக்கம் தயாரிப்பாளருக்கு வழக்கு

கொழும்பு, பெப்.19

இலங்கையிலும் இந்தியாவிலும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மறுஉருவாக்க முயற்சி தொடர்பாக திரைப்படத்துறை சார்ந்த ஒருவருக்கு எதிராக இந்திய தேசியப் புலனாய்வுப் பிரிவு, தமிழ்நாட்டின் சிறப்பு நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வழக்கில் இதுவரை 13 பேர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். இந்தவழக்கில் 14ஆவது குற்றவாளியாக லிங்கம் என அழைக்கப்படும் ஆதிலிங்கம் என்பவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்வதன் மூலம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பை மீண்டும் உயிர்ப்பிக்க சதி செய்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டவர் தமிழ்த் திரைத்துறையில் தயாரிப்பு நிர்வாகியாகப் பணிபுரிந்துள்ளார் என்றும் இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ-இ)




**வீட்டுக் கட்சியின்ர பிரச்சினை பெரும் பிரச்சினையா மாறும் போல கிடக்குது. ஆனாலும் வீட்டுக் கட்சிக்குள்ள இருந்துகொண்டே கட்சியை முடக்கிற மாதிரி வழக்குப் போட்டவையில சனம் கடும் கோபத்தில இருக்குதெண்டதுதான் உண்மை. என்னதான் அவை 'யாப்பை மீறி கட்சி செயற்பட்டால் வழக்குப் போட்டுத் தட்டிக்கேக்கிறது பிழையோ?' எண்டு வெளியுலகத்துக்கு தங்களைச் சுத்தமான சூசையப்பர் மாதிரிக் காட்டிக் கொண்டாலும் அவையின்ர 'பீத்தல் பிணக்குகள்'எல்லாம் சனத்துக்கும் நல்லாத் தெரியும்.**

**திருகோணமலையிலையும், யாழ்ப்பாணத்திலையும் வழக்குப் போட்டவை உள்ளுக்கால கட்சியின்ர புதுத்தலைவருக்கும், பழைய தலைவருக்கும் தூது அனுப்பியிருக்கினமாம். தூது எண்டதை விடவும், 'டீலிங்' எண்டுறதுதான் உண்மை. கடைசியா நடந்த பொதுச்சபைக்கூட்டத்தில மத்திய குழுவால ஆராருக்கு என்னென்னபதவி எண்டு ஒரு லிஸ்ட் வாசிச்சு, அதுக்கு அலாப்பித்தனமா ஒரு வாக்கெடுப்பும் நடந்து. பிறகு அந்தக் கள்ளவாக்கெடுப்பு செல்லாது எண்டதால கூட்டதை ஒத்தி வைச்சவையெல்லோ. அந்தப் பதவி லிஸ்டில உள்ள ஆக்களுக்கு அப்பிடியே முழுசா ரண்டு வருசமும் பதவியைக் குடுக்கிறதெண்டால் வழக்கை வாபஸ் வாங்கலாம் எண்டு கட்சியின்ர மேலிடத்தோட டீல் பேசியிருக்கினமாம். அப்ப வழக்குப் போட்டவைக்கு கட்சியின்ர யாப்பை மீறிக் கூட்டம் போட்டதெண்டது ஒரு பிரச்சினையே இல்லை. பதவி மட்டும் தான் பிரச்சினை. பதவியைக் குடுத்தால் யாப்பை மீறினது எல்லாம் சரியாயிடும் எண்டால் , உவையெல்லாம் என்னெண்டு சனத்துக்கு நேர்மையா இருப்பினமெண்டு நம்பிறது?**

**ஆனால் இவையின்ர வெருட்டுக்கு கட்சி மேலிடம் எடுபடாதாம். எது வந்தாலும் ஒருக்கா மோதிப்பாக்கிறதுதான் எண்ட நிலைப்பாட்டிலதான் மேலிடம் இருக்குதாம். இதை வழக்குப் போட்டவை எதிர்பாக்கேலை. இப்பிடி வழக்குப் போட்டால் 'வழக்கு ரண்டு வருசம் இழுபடும். அதால டீலுக்கு ஓமெண்டுறதுதான் நல்லது' எண்டு பயப்பிடுத்தினால், உடனேயே கட்சிக்காரர் பணிஞ்சு போவினம், அதை வைச்சு டீலைப் பேசி முடிச்சு, தங்கட பவரைக் காட்டுறதுதான் அவையின்ர ஐடியாவாம். அதோட தங்களுக்கும் இதைச் சாட்டி மத்தியகுழுவுக்குள்ள இடம் தரச் சொல்லிக் கேக்கிற பக்கத்து இலைப் பாயாச விளையாட்டுக்கும் பிளான் பண்ணியிருக்கினம். ஆனால் சட்டம் எண்டது தனிய ஒராளின்ர சீதனம் எண்டு நினைச்சிட்டினம் போலகிடக்கு. இப்ப சொந்தக் காசிலையே தங்கட பக்கத்துக்கு சூனியம் வைச்சுப் போட்டினம். இப்பிடி பதவிக்காக சொந்தக் கட்சியையே கூறாக்கி, ஒழுங்காக் கட்சியை நடத்தவிடாமல் செய்துபோட்டு, பிறகு அந்தக் கட்சியிலையே எலக்சன் கேட்டுப் போனால் சனம் விளக்குமாத்தைத் தானே கையில எடுக்கும்? தாங்கள் ஆதரிச்சவருக்கு ஐஸ் பண்ணுறதெண்டு நினைச்சு, கடைசியா தங்களுக்கும், தாங்கள் ஆதரிச்சவருக்கும் குழியைத் தோண்டி, அரசியல் தற்கொலை செய்ததுதான் மிச்சம் பாருங்கோ. தன்வினை தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும்.**




padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரணவின் புயல் வேகத்தால் இலங்கைக்குப் பரபரப்பு வெற்றி!

கொழும்பு, பெப். 19

**ஆப்கானிஸ்தானுக்கு எதிரான முதலாவது ரி-20 ஆட்டத்தில், பத்திரணவின் புயல் வேகமும், அணித்தலைவர் வனிந்துவின் அட்டகாசமான அதிரடியும் கைகொடுக்க இலங்கை அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இலங்கை அணியின் ஆரம்ப வீரர்களாக பதும் நிஷங்க மற்றும் குசல் மென்டிஸ் இருவரும் களமிறங்கினார்கள். 4 ஓட்டங்களுடன் பதும் நிஷங்கவும், 10 ஓட்டங்களுடன் குசல் மென்டிஸும் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார்கள். தனஞ்சய டி சில்வா, சமரவிக்கிரம இருவரும் இணைந்து அணியை மீட்டெடுக்க முனைப்புக் காட்டியபோதிலும் அந்த முனைப்பு அவ்வளவு பெரிய வெற்றியைப் பெறவில்லை. தான் பெற்ற 25 ஓட்டங்களுக்காக 24 பந்துகளை எதிர்கொண்டார் சமரவிக்கிரம. தனஞ்சய 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அசலன்கவும் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அணித்தலைவர் வனிந்து தனிநபராகப் போராடினார். மத்தியூஸ், தசுன் சானக என எவரும் அவருக்குப் பக்கபலமாக இணைப்பாட்டம் அமைக்கவில்லை. எனினும் 32 பந்துகளில் 67 ஓட்டங்களைக் குவித்து 160 என்ற கௌரவ நிலையை அடைய வைத்தார் வனிந்து ஹசரங்க.

பந்துவீச்சில் பரூக்கி 3 இலக்குகளையும், நவீன், ஓமர்ஷா இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணியும் பலமான ஆரம்பம் காணவில்லை. அணித்தலைவர் இப்ராகிம் சடான் ஒருமுனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனை இணைப்பாட்டமொன்று அமைக்கப்படவில்லை. குர்பராஸ் 13, நயிப் 16, ஒமர்ஸை 2, நபி 9 என வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். கரிம் ஜனட் 20 ஓட்டங்களைப் பெற்று அணித்தலைவர் இப்ராகிம் சடானுடன் சற்று ஒத்துழைக்க வெற்றி பெறக்கூடிய நம்பிக்கை ஆப்கானிஸ்தானிடம் ஏற்பட்டது. எனினும் தனது அதிவேகப் பந்துவீச்சால் ஆப்கானிஸ்தானை நிலைகுலைய வைத்தார் பத்திரண.

முடிவில் 156 ஓட்டங்களையே ஆப்கானிஸ்தானால் பெறமுடிந்தது. 4 ஓட்டங்களால் இலங்கை அணி வெற்றி பெற்றது.

பந்துவீச்சில் பத்திரண 4 இலக்குகளையும், தசுன் சானக 2 இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)









# யாழ்ப்பாண மாவட்டத்தில் 271 பேருக்கு வீட்டுத்திட்டம்

யாழ்ப்பாணம், பெப்.19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 271 பயனாளிகளுக்குத் தலா 15 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன. இந்த வீட்டுத் திட்டம் 242.830 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் அபிவிருத்தித் திட்டத்தின் இரு நிகழ்ச்சி திட்டங்களின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளிடம் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கே இவை வழங்கப்படுகின்றன.

'உங்களுக்கு ஓர் வீடு நாட்டுக்கு எதிர்காலம் வேலைத்திட்டம்' என்ற திட்டத்தின் கீழ் 256 பயனாளிகளுக்கு 233.500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும், செவனமானிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கு 9.330 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலும் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)

# பெரியசாளம்பன் கிராமத்துக்கு குடிதண்ணீர் வழங்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப். 19

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான், பெரியசாளம்பன் கிராமத்தில் நிலவும் குடிதண்ணீர் நெருக்கடியைத் தீர்த்து வைக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்ததாவது:-



115 குடும்பங்கள் வாழ்கின்ற இந்தக் கிராமத்தில் நீண்டகாலமாகவே குடிதண்ணீர் நெருக்கடி நிலவுகின்றது. தட்டையர்மலை கிராம அலுவலர் பிரிவில் பெரியசாளம்பன் கிராமம் உள்ளது. தட்டையர்மலை கிராமத்துக்கு முத்தையன்கட்டு குளத்து நீர் வருகின்றது. ஆனால், பெரியசாளம்பன் கிராமத்துக்கு குளத்து நீர் வருவதில்லை. இதன் காரணமாக கடும் வறட்சியான காலங்களில் பெரியசாளம்பன் கிராமத்தின் கிணறுகள் அனைத்தும் முற்றாக வற்றிவிடும். கிராமத்துக்குவரும் அதிகாரிகளிடம் இதை பலமுறை சுட்டிக்காட்டி நல்லதொரு தீர்வைத் தருமாறு பலமுறை வலியுறுத்தியபோதிலும் இன்னமும் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஏனைய கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்த்திட்டம்போன்று பெரியசாளம்பன் கிராமத்திலும் உருவாக்கப்படவேண்டும் - என்றனர். (ம-13)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பிரமுகர்களைச் சந்திப்பீர்கள். வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உத்தியோகத்தில் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** திட்டவட்டமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**கடகம்:** சந்தோஷம் நிலைக்கும். பாதியில் நின்ற வேலைகள் விரைந்து முடியும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்:** வேலைச்சுமையால் உடல் அசதி மனச் சோர்வு வந்து நீங்கும். அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுக்க வேண்டிய நாள்.

**கன்னி:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வீண்வாதங்களில் ஈடுபடவேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வந்து விலகும்.

**துலாம்:** குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் கடமையுணர்வுடன் செயற்படுவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள் சிறப்பான நாள்.

**விருச்சிகம்:** கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். வாகனவசதி பெருகும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:** மனம் விட்டுப் பேசுவீர்கள். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தம் கையெழுத்தாகும். உரிமையை பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**மகரம்:** அநாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். இடர்பாடுகளைச் சமாளிக்க நேரிடும்.

**கும்பம்:** விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**மீனம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## பிள்ளைகளைப் பின்தொடரும் பெருந்துயர்

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வருடம் 91 சிறுமிகள், குழந்தைகளைப் பிரசவித்திருக்கின்றனர். வடக்கின் இதர மருத்துவமனைகள் மற்றும் தேசிய அளவிலான புள்ளிவிவரங்களை எடுத்துக் கொண்டால் இந்த எண்ணிக்கை அச்சப்படக்கூடிய வகையில் இன்னுமின்னும் அதிகமாயிருக்கும். இளவயதுக் கர்ப்பங்கள் எனப்படுபவை சமூகச் சீர்கேடுகளுக்கு அப்பாற்பட்டு, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்காலத்தையே இல்லாமற் செய்யக்கூடியன என்ற வகையில், இந்தத் தகவல்களும் புள்ளிவிவரங்களும் அதிக அபாயம் மிக்கன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்தப் புள்ளிவிவரங்கள் வெளியான சமகாலத்தில் மன்னாரில் பத்துவயதுச் சிறுமியொருத்தி வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறாள். இவையெல்லாமே நம் இளைய சந்ததி குறித்த அச்சத்தையும், சமூகம் மீதான் வெறுப்பையும் அதிகரிக்கச் செய்கின்றன.

குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் துர்நடத்தைகள் தொடர்பில் தேசிய ரீதியிலான கருத்தாடலொன்று கடந்த வருடம் மார்ச் மாதத்தில் இடம்பெற்றது. இதன் தொடர்ச்சியாக பாடசாலை மாணவர்களுக்கு பாலியல் விழிப்புணர்வுக் கல்வியை வழங்கும் 'செயற்பாட்டு நடவடிக்கைகளில்' இறங்கியது அரசாங்கம். வெறும் 'பேச்சுக் கல்வியாக' அல்லாமல் பாடப்புத்தகங்களில் ஒரு கற்கைநெறியாக இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும், அதற்கு மேலதிகமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சின் கீழ் உள்ள பல்வேறு நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளிட்ட துறைசார் நபர்களை ஒரு குழுவாக ஒருங்கிணைத்து மேற்கொள்ளப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டது. ஆனால், இந்தத் திட்டத்தின் அடைவு மட்டத்தினதும், அதன் செயற்பாட்டுத் தளத்தினதும் தோல்வியையே இளவயதுக் கர்ப்பங்கள் தொடர்பான தகவல்களும், தொடர்ச்சியாக குழந்தைகளைப் பின் தொடரும் காமுகர்களின் அரக்கத்தனங்களும் கட்டியம் செய்கின்றன.

ஒரு குழந்தை, அதன் ஐந்து வயது வரைக்கும், பெற்றோரினதும் உற்றோரினதும் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும்தான் கூடுதலான நேரங்களைச் செலவிடுகின்றது. பாடசாலைக்காகப் புறப்பட்ட பின்னர் மூன்றாம் தரப்பு நபர்களுடனான பழக்கத்தை உருவாக்கவேண்டிய கட்டாயமும் தவிர்க்கமுடியாத்தனமும் அந்தக் குழந்தைக்கு ஏற்படுகின்றது. இதனால் பள்ளிப்பருவத்தின் ஆரம்பநாள்களிலேயே அந்தக் குழந்தைக்கு நல்ல தொடுகை தொடர்பிலும், தவறான தொடுகை தொடர்பிலும் முடியுமான வரையிலான தெளிவூட்டல்களை விழிப்புணர்வு நடவடிக்கைகளை ஏற்படுத்துவது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும். அதற்காக, இதுவரை இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் இல்லாமல் இருந்தன என்றோ அல்லது சிந்தனை வரட்சி மிக்கதாக இருந்தன என்றோ பொருளல்ல. பேச்சு வழக்கில் மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும், பாடப்புத்தகமாக கற்றல் நடவடிக்கையாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வுச் செயற்றிட்டங்களுக்கும் இடையில் ஆகப்பெரும் வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. இந்த இரண்டாம் நிலை நடவடிக்கைகள் மிக இலகுவாக மாணவர்களைச் சென்றடைய வல்லவை. இங்கு விடயமும் அதுதான்.

பொருளாதாரப் பின்னடைவைக் காரணம்காட்டி, இந்த நல்ல திட்டத்தை பூர்வாங்க நடவடிக்கைகளுடன் அரசாங்கம் கைவிட்டுவிடாமல், போர்க்கால அடிப்படையில் இது செயலுருப்பெற வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை-இது அரசாங்கத்துக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ மட்டுமான பணியுமல்ல. பிள்ளைகளின் நடத்தைக்கோலங்களில் கூடுதலான அக்கறைகொண்டவர்களாக பெற்றோரும் இருக்கவேண்டும். வகுப்பறையில் பத்துடன் பதினொன்றாக ஒரு பிள்ளையை ஆசிரியர் கண்காணிப்பதற்கும், வீட்டில் அந்தப் பிள்ளை ஏக கண்காணிப்பில் இருப்பதற்கும் இடையே மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாடுகள் உள்ளன. இந்தப் பொறுப்புணர்வை பெற்றோர் வரித்துக்கொள்ள வேண்டும். இவை எல்லாமும் சேர்ந்த கூட்டொருங்கிய செயற்பாடுதான் பிள்ளைச் செல்வங்களின் நாளைய வளமான எதிர்காலமும் இருப்புமாகும்...!



# உயிரைப் பறிக்கும் நுண்நிதிக் கடன்கள்

**கொழும்பு, பெப்.19**

**அண்மைக்காலமாக நுண்நிதிக் கடனில் சிக்கி 200க்கும் மேற்பட்டோர் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர் என்று சனத்தொகை புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.**

அந்தத் திணைக்களத்தின் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
நாட்டில் சுமார் 28 இலட்சம் பேர் நுண்நிதி கடன் வலையில் சிக்கியுள்ளனர். அவர்களில் 2 இலட்சத்து 40 ஆயிரம் பேர் பெண்களாவர். பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பது தொடர்பான துறைசார் கண்காணிப்புக்குழுவின் தரவுகளின்படி, நுண்கடன் நிறுவனங்கள் 38 வீதம் முதல் 48 வீதம்வரை அதிக வட்டியில் கடன்களை வழங்கியுள்ளன என்று தகவல் வெளியாகியுள்ளது.
மத்திய கிழக்கு நாடுகளில் அதிகளவில் பெண்கள் வீட்டு வேலைக்குச் சேர்வதும் நுண் கடன் நெருக்கடிக்குக் காரணம்-என்றுள்ளது. (எ-இ)

## மரக்கறி விலை சரிவு

கொழும்பு, பெப். 19
பேலியகொட புதிய மெனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது..
ஒரு கிலோ கரட் 500 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 200 ரூபாவாகவும் சரிவடைந்துள்ளது.
அதேவேளை, ஒரு கிலோ போஞ்சி 550 ரூபாவாகவும், ஒரு கிலோ பச்சை மிளகாய் 700 ரூபாவாக வும், ஒரு கிலோ தக்காளி 800 ரூபாவாக வும் பதிவாகியுள்ளது . (ச-இ)

## 470 யானைகள் 2023 இல் சாவு!

கொழும்பு, பெப். 19
2023 ஆம் ஆண்டில் 470 யானைகள் உயிரிழந்துள்ளன.
அவற்றில் 200 யானைகள் மனிதச் செயற்பாடுகளால் உயிரிழந்துள்ளன என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.
கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அதிகளவான யானை உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## மின்பாவனையில் சிக்கனம் பேணுக!



கொழும்பு, பெப். 19
இலங்கையில் தற்போது நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக நீர் மின் உற்பத்தி மட்டுப்படுத்தப்படவுள்ளது என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.
அனல் மின் உற்பத்தி 63 சத வீதம் வரை அதிகரிக்கலாம்.
மின்தேவை அதிகரித்துள்ள நிலையில் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தை நிர்வகிக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.
எனவே மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று இலங்கை மின்சாரசபையின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# தேர்தல் ஆணைக்குழு கட்சிகளுக்கு அழைப்பு

எதிர்வரும் தேர்தல்கள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.
எதிர்வரும் வாரத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழு, அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கு அறிவித்துள்ளது. அதன்படி, பதிவு செய்யப்பட்டுள்ள 80 அரசியல் கட்சிகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர். தேர்தல்களை உரியகாலத்தில் நடத்துதல், வாக்காளர் பதிவு தொடர்பிலான பிரச்சினைகள் குறித்து சந்திப்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நாளை

20.02.2024
**செவ்வாய்க்கிழமை**
**மாசி–08**

சுபநேரம் : 11.02 –12.32
ராகுகாலம் : 03.32 – 05.02

பீமஏகாதசி விரதம்

## நாளொரு நல்வார்த்தை

**வெற்றி ஒரு மோசமான ஆசிரியர்**
**அது புத்திசாலிகளையும் மயக்கி**
**தோல்வியே நமக்கு இல்லை**
**என்று நினைக்க வைத்துவிடும்**
**– பில்கேட்ஸ்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் போராளிகள் குழு பயங்கரவாத அமைப்பல்ல!




### ஐ.நா. மனிதாபிமான அதிகாரி மார்ட்டின் கிரிபித்ஸ் தெரிவிப்பு

**வொஷிங்டன், பெப். 19**


**ஹமாஸ் என்பது ஒரு பயங்கரவாத குழுவல்ல. அதுவொரு போராளிகள் குழு. அத்துடன் அது ஓர் அரசியல் இயக்கம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான விவகார அதிகாரியான மார்ட்டின் கிரிபித்ஸ் தெரிவித்துள்ளார்.**

ஹமாஸ் அமைப்பால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்த 134 பேரில் 31 பேர் உயிரிழந்துவிட்டனர் என அண்மையில் இஸ்ரேல் தெரிவித்திருந்தது.

புலன் விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்ட இந்தத் தகவல் தொடர்பான விவாதத்தின்போதே, 'ஹமாஸ் என்பது பயங்கரவாதக் குழு அல்ல' என்று மார்ட்டின் கிரிபித்ஸ் தெரிவித்துள்ளார்.

**இஸ்ரேல் கண்டனம்**

கிரிபித்ஸின் கருத்துக்கு இஸ்ரேலின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். 'ஐ.நா. அமைப்பு ஒவ்வொரு நாளும் தரம் குறைந்து வருகின்றது. ஹமாஸ் ஒரு பயங்கரவாத அமைப்பு என்ற உண்மையை ஐ.நா. அதிகாரிகள் ஏற்க மறுப்பது ஏனென்று புரியவில்லை' என்று இஸ்ரேலின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபைக்கான இஸ்ரேலின் தூதுவர் கிலாட் எர்டானும், கிரிபித்ஸின் கருத்துகளைக் கண்டித்துள்ளார். "நூற்றுக்கணக்கான குடிமக்களைக் கொடூரக் கொலை செய்தது பயங்கரம் இல்லையா? பெண்களைத் திட்டமிட்டு பலாத்காரம் செய்தது பயங்கரம் இல்லையா? யூதப் படுகொலை முயற்சி பயங்கரம் இல்லையா? கிரிபித்ஸ் ஒரு பயங்கரவாத கூட்டாளி" என எர்டான் தெரிவித்துள்ளார். (ம)



## பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி!

ஜெருசலேம், பெப். 19

காஸா மீதான இஸ்ரேலின் கொடுமையான போர் நிறுத்தப்படவேண்டும் என்று கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் வலியுறுத்தியிருந்த அமெரிக்கா, இஸ்ரேலுக்குத் தேவையான இராணுவத் தளவாடங்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தப் போரில் சுமார் 28 ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 70 ஆயிரம் பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன் லட்சக்கணக்கான பொதுமக்கள் ராபாவுக்குள் இடம்பெயர்ந்துள்ளனர். பொதுமக்களின் பாதுகாப்பில் இஸ்ரேல் மெத்தனப்போக்கைக் கொண்டிருக்கக்கூடாது என்றும் அமெரிக்கா முன்னதாக வலியுறுத்தியிருந்தது.

போரைக் கண்டித்த இதே அமெரிக்கா தற்போது இஸ்ரேலுக்குத் தேவையான ஆயுதங்களை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. (ம)

## நவால்னியின் உடலை ஒப்படைக்கத் தயக்கம்

### ஆதாரங்கள் அழிக்கப்படுகின்றதா என நவால்னியின் சகாக்கள் கேள்வி


மொஸ்கோ, பெப். 19

சிறையில் உயிரிழந்த ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சி நவால்னியின் உடலை அவரின் தாயாரிடம் ஒப்படைப்பதற்கு ரஷ்ய அதிகாரிகள் தயக்கம்காட்டி வருகின்றனர் என்று நவால்னியின் சகாக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

நவால்னி சிறைக்குள் நடைப்பயிற்சி மேற்கொண்டபோது மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் என்று கடந்த வெள்ளிக்கிழமை தெரிவிக்கப்பட்டது. ஆனால், இரண்டு நாள்கள் முழுமையாகக் கடந்த பின்னரும் அவருடைய உடல் இன்னமும் தாயாரிடம் ஒப்படைக்கப்படவில்லை.

நவால்னியின் மரணத்தில் சதி உள்ளதாக நாவால்னியின் தாயாரும் அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளும் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அவருடைய சடலம் இன்னமும் கையளிக்கப்படாமல் இருப்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

நவால்னியின் சகாக்கள், "உடற்கூற்றுப் பரிசோதனை என்ற பெயரில் சடலத்திலிருந்து தடயங்கள் அழிக்கப்படுகின்றனவா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம)



## பாகிஸ்தான் தேர்தலில் ஏராளம் முறைகேடுகள்

### தேர்தல் ஆணையர் குற்றச்சாட்டு

இஸ்லாமபாத், பெப். 19

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பல முறைகேடுகள் இடம்பெற்றன என்றும், தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்கள் வெற்றிபெறச் செய்யப்பட்டனர் எனவும் ராவல்பிண்டி தேர்தல் ஆணையர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

'என் வாழ்வில் முதுகில் குத்தும் பழக்கமில்லை. ஆதலால், இந்த முறைகேடுகளைச் சகித்துக்கொண்டு இந்தப் பதவியில் தொடர விருப்பமில்லை' என்று தெரிவித்து அவர் தனது பதவியைத் துறந்துள்ளார்.

இதேவேளை-'தலைமைத் தேர்தல் ஆணையர் மீது ராவல்பிண்டி ஆணையர் சுமத்திய குற்றச்சாட்டுகளைப் பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் முழுமையாக நிராகரித்துள்ளது. (ம)



கனடாவில் இந்திய தேசியக் கொடிகளை எரித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. கனடாவின் வான்கூவார் பகுதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்துக்கு எதிரில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-இ)



## பிரிட்டனைப் புறக்கணிக்கும் வெளிநாட்டு மாணவர்கள்

பிரித்தானியாவில் கல்வி விசாவுக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியாவில் குறுகியகாலம் தங்கியிருந்து வேலை தேடுவதற்கு முன்னர் வழங்கப்பட்ட அனுமதி கட்டுப்பாடுக்குள் வந்ததையடுத்து விசா விண்ணப்பங்கள் குறைந்துள்ளதாக அறியமுடிகின்றது.

பிரித்தானியாவுக்குச் சார்ந்தவர்கள் அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை அழைத்துவர அரச நிதியுதவியுடன் கூடிய கற்கைகள் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், பிரித்தானியாவுக்கான விசா விண்ணப்பங்கள் தற்போது குறைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



## தக்சின் விடுதலை

பாங்கொக், பெப். 19

பாங்கொக் சிறையில் அடைக்கப்பட்டுள்ள தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் தக்சின் ஷினவத்ரா நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டமைக்காக 2023 ஆம் ஆண்டு தக்சினுக்கு எட்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் உடல்நலக் குறைவு காரணமாக 74 வயதான அவர், பாங்கொக் சிறையில் இருந்து மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி, கரம்பைக்குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் அமரர்கள் கதிரன் கந்தையா, கந்தையா நந்தகுமார் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட நுழைவாயில் திறப்பு விழா பாடசாலை வளாகத்தில் அதிபர் நா.கண்ணதாசன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய, கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ந.காண்டீபன், ஓய்வு நிலை அதிபர் சி.கந்தசாமி, பாடசாலை பழைய மாணவர் க.கிருஷ்ணகுமார், ஜே/342 கரம்பைக்குறிச்சி பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.சிவபாதசுந்தரம், திருமதி கந்தையா செல்லம்மா எனப் பலர் கலந்துகொண்டனர். (ப-159)





இலங்கைக்கான இந்தியத் தூதுரகத்தின் ஏற்பாட்டில், “இந்தியாவிலிருந்து அன்புடனும் அக்கறையுடனும்” எனும் தொனிப்பொருளில் மன்னார் மாவட்டத்திலுள்ள நான்கு கடற்றொழில் சமாசங்களுக்கு, கடலுணவுகளைக் கெடாமல் பாதுகாக்கும் குளிர்சாதனப்பெட்டிகள் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டன. மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் எச். இ. சந்தோஷ் ஜா, துணை ஸ்தானிகர் ராகேஷ் நடராஜ் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (ப-9)





யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தின் வெளியரங்கில் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத்தூதுவர் சந்தோஷ் ஜா, யாழ். துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இசை ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-66)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் தொழில் முயற்சியாளர்களுக்கான நான்கு நாள்கள் தொழில் வழிகாட்டல் பயிற்சிநெறியின் இறுதி நாள் நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ப-9)





சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வு, சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சைவப்புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி கலந்துகொண்டார். (ப-66)





## உயிரிழப்புகளின் பின்னரும் விதியை பின்பற்றாத மக்கள்

### வவுனியாவில் இந்த நிலை

வவுனியா, பெப். 19

வடமாகாணத்தில் பரவலாக ரயில் விபத்துகள் இடம்பெற்றுவரும் நிலையிலும், வவுனியாவிலுள்ள பல ரயில் கடவைகளில் மக்கள் பொறுப்புணர்வின்றி ஆபத்தான வகையில் பயணம் மேற்கொள்கின்றமையும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா ரயில்நிலைய வீதியில் காணப்படும் ரயில் பாதுகாப்புக் கடவையின் கதவுகள் மூடப்பட்டிருக்கும் சமயத்தில் பொதுமக்கள் வீதிப் போக்குவரத்து நடைமுறைகளைப் பின்பற்றாது பாதையின் இரு பக்கங்களிலும் சீரற்ற முறையில் வாகனங்களை தரித்து வைத்தல், ரயில் பாதுகாப்புக் கடவை மூடப்பட்டிருக்கும் சமயத்தில் வாகனத்தை செலுத்துதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதனால், இனிவரும் காலங்களில் இந்தப் பகுதிகளில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் என்றும் விதிமீறலில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூராட்சி மன்றங்களால் கொட்டப்படும் கழிவுகளால் சுகாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று புதிய சாளம்பைக்குள மக்கள் குற்றஞ்சாட்டிவரும் நிலையில், குறித்த பகுதியை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றிஷாத் பதியுதீன் கடந்த சனிக்கிழமை பார்வையிட்டார். (ப-18)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் 'உயர்த்தும் கரங்கள்' செயற்றிட்டத்தினூடாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சை நிலையத்துக்குத் தேவையான ஒருதொகுதி மருந்துகள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. கோண்டாவில் வாழ் அமரர். பொன்னுத்துரை சற்குணத்தின் 31 ஆம் நாள் நினைவு நாளை முன்னிட்டு அவரது குடும்பத்தினரின் நிதிப் பங்களிப்பு ஊடாக இவை வழங்கப்பட்டுள்ளன. (ப-66)






யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்தவங்கிப் பிரிவின் அனுசரணையில் உரும்பிராய் உதவும் நண்பர்கள் அமைப்பு, உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையம், உரும்பிராய் மேற்கு இளைஞர் கழகம் என்பன இணைந்து 10 ஆவது ஆண்டாக ஒழுங்கமைத்த குருதிக்கொடை முகாம் நிகழ்வு உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமி , பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)

கிளிநொச்சி தெற்கு, கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தின விழா கூட்டுறவுச் சபை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. பிரதி வலயக்கல்விப் பணிப்பாளர் வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறை விரிவுரையாளர் இ. சர்வேஸ்வரா, வடக்கு வலய பதிவாளர் நாயகம் சிவநயனி சர்வேஸ்வரா, வலயக்கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27)





கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்குச் சென்ற இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தலைமையிலான குழுவினர், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கினர். (ப-113)




தமிழ் விக்கிப்பீடியாவை முதன்முதலில் உருவாக்கியவரான இணுவிலூர் இ. மயூரநாதனின் நெறிப்படுத்தலில் சுன்னாகம் பொதுநூலக டிஜிற்றல் அறிவு மையத்தில் 'தமிழ் மென்பொருள்கள்' எனும் தலைப்பில் இணையவழியூடான கருத்துரை கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. மதுரையைச் சேர்ந்த மென் பொறியியலாளர் 'நீச்சல்காரன்' என்கிற சே. ராஜாராமன் வளவாளராகக் கலந்துகொண்டார். இந்த இணையவழிக் கருத்துரை நிகழ்வு சுன்னாகம் பொதுநூலக நிர்வாகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. (ப-66)

வவுனியா மாவட்டத்தில் 125 பேருக்கு விவசாய பயிர் பாதுகாப்புத் துப்பாக்கிகளை வவுனியா மாவட்டச் செயலகத்தில் வைத்து கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கடந்த சனிக்கிழமை வழங்கினார். (ப-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
26
10
1950



மறைவு
10
02
2024

## கனகரத்தினம் இரத்தினசிங்கம் (ராசு)

மடத்தடி மாவிட்டபுரத்தைப பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வதிவிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இரத்தினசிங்கம் ( ராசு ) கடந்த (10.02.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பாக்கியம், தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - மனோரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் (இந்திரா) அன்புக்கணவரும், றஸ்மி, ரவின் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசமணி, காலஞ்சென்ற சோதிமலர், மகாலிங்கம், பாலசிங்கம், தவமணி, சந்திரமலர், தளையசிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சறோஜினிதேவி, காலஞ்சென்ற இரத்தினசபாபதி, செல்வரத்தினம், மகேஸ்வரன், சிவமலர், கலாவதி, விக்கினேஸ்வரன், சுபாஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (19.02.2024) இன்று அமெரிக்காவில் காலை அமெரிக்க நேரப்படி 09.00 மணியளவில் இடம்பெறும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Zoom ID : 89247002886
Password : 1122

நீர்வேலி வடக்கு
காமாட்சியம்பாள் கோவிலடி,
நீர்வேலி

தகவல்:
குடும்பத்தினர்.
ரவின் (மகன்) - 0019179123434 (USA)
றதீஸ் - 075 026 5043

(CS/54001) J-1

# ஆதன பெயர்மாற்றம் தொடர்பான அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம், சுன்னாகம்.**
**வட்டாரம்-06, சாமுவேல்மான் வீதி, ஆதன இல - 37**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட சாமுவேல்மான் வீதி, சுன்னாகம் எனும் முகவரியில் அமைந்துள்ள ஆதனமானது எமது ஆதனப் பதிவேட்டில் வட்டாரம்-06, சாமுவேல்மான் வீதி, ஆதன இல:37ல் Mr.வில்பிரட் சௌந்தரநாயகம் அலெக்சாண்டர் எனும் பெயரில் உள்ளது.

பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் முகதாவில் வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை, வலிகாமம் தெற்கு பிரதேசசெயலர் பிரிவு, J/185 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள "விளானை" எனக்குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்பு 3 1/2 தற்போது உத்தரவு பெற்ற உலாந்தா எஸ்.பாலேந்திரன் என்பவரால் 10.08.2019ல் அளந்து தயாரித்த 1133ம் இலக்கப்படத்தின்படி நிலப்பரப்பு 3 குளி 12.40 உடைய ஆதனமானது 2019.08.16 ஆம் திகதிய 12261 ஆம் இலக்க உறுதி மூலம் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

அதன் எல்லைகளாக,

கிழக்கு - பாக்கியத்தின் ஆதனம்
வடக்கு - டச்சுறோட்
மேற்கு - C.W.K.Dansforthத்தின் ஆதனம்
தெற்கு - C.W.K.Dansforthத்தின் ஆதனம்

மேலும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ்.பாலேந்திரன் அவர்களால் 2019.08.10இல் அளந்து தயாரிக்கப்பட்ட 1133ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 ஆகிய நிலப்பரப்பு 3 குளி 12.40 ஆகும். இவ் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு இ.வசந்தசேனன் அவர்கள் மூலம் 2019.08.16 ஆம் திகதிய 12262 ஆம் இலக்க அறுதி உறுதியால், டச்சு வீதி, உடுவில் என்னும் இடத்தை சேர்ந்த கனகரத்தினம் லோகேஸ்வரன் பெண் கமலாதேவி (556743789V) எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

எனவே இப்பெயர்மாற்றம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் அல்லது உரிமை கோருபவர்கள் எவராவது இருந்தால் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவோ உரிமைகோரவோ இல்லையெனின் குறித்த ஆதனமானது கனகரத்தினம் லோகேஸ்வரன் பெண் கமலாதேவி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெயர் மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ்விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி
............................

செயலாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(cs.54017) (N-1)

# கனகம் மலர் வெளியீடு

கிளி., பெப்.19

சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தின் அதிபர் பெருமாள் கணேசனின் மணிவிழா மற்றும் 'கனகம்' மலர் வெளியீடு என்பன பாடசாலை மண்டபத்தில் மணிவிழாக் குழுத் தலைவர் மூத்த ஆசிரியை திருமதி றொ.ஜெசி தலைமையில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

(ப-159)

# மணிவிழா வாழ்த்து



## திருமதி லோகேஸ்வரி நகுலசிறி

**SLTS - I**

(பயிற்றப்பட்ட விசேட வர்த்தகம்
Special trained in commerce )

அவர்கள் **19.02.2024** திங்கட்கிழமை அன்று ஓய்வுபெற்று மணிவிழா காணும். இன்றைய நாளில் அவருடைய மகத்தான சேவையினை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கல்வி கற்ற பாடசாலைகள்**

- ஆரம்பக்கல்வி - நெடுந்தீவு மகேஸ்வரி வித்தியாலயம்
- இடை நிலைக்கல்வி - நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்
- உயர்கல்வி - யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

**சேவை விபரம்**

- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம். Teacher - 1988 - 1995
- திருகோணமலை / உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி. Teacher - 1995 - 1996
- ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பலாலி. - 1997 - 1998
- யா/ நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம். Teacher - 1999 - 2010
- யா/ நெடுந்தீவு மகா வித்தியாலயம். Teacher - 2010 - 2013
- யா/ நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம். Performing Principal 2013 - 2024

வாழ்த்துவோர்:

குடும்பத்தினர்

கணவர், பிள் மற்றும் அக்கா, தங்கை, தம்பி மற்றும் மைத்துனி, அஷ்னா, அஸ்வி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# 200 நாள்களாகத் தொடர்கிறது பொன்னாவெளிப் போராட்டம்!

சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராகப் பூநகரி- பொன்னாவெளி மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்றுடன் 200 ஆவது நாளை எட்டியுள்ளது.

பொன்னாவெளிக் கிராமத்தில் மேற்கொள்ளப்படும் சுண்ணக்கல் அகழ்வால், கடல் நீர் வயலுக்குள்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும், வயல்நிலங்கள் உவர்நீராக மாறுகின்றன எனவும் கிராம மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அங்கு நடைபெறும் சுண்ணக்கல் அகழ்வை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி அவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் நேற்றுடன் 200ஆவது நாளை எட்டியுள்ள நிலையில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்வரையில் போராட்டம் தொடரும் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (எ-13)

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு; கைதான நபருக்கு விளக்கமறியல்!

பருத்தித்துறை, பெப். 19

மந்திகையில் வீதியில் நெல் உலரவிடுவதற்காக தங்கியிருந்தபோது அதிகாலை ஏற்பட்ட விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய மோட்டார் சைக்கிள் சாரதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 11ஆம் திகதி விபத்து இடம்பெற்றிருந்தது. வீதியில் நெல்லை உலரவிடுவதற்காக உழவு இயந்திரத்துக்கு அருகே படுத்திருந்தபோது அவ்வீதி ஊடாக பயணித்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கடந்த புதன்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதிவான் பொன்னுத்துரை கிரிசாந்தன் சந்தேகநபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஒ-100)


## 27ஆம் ஆண்டு நினைவு



மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) தோற்றம் :- 23.06.1974
திருச்செல்வம் கம்சினி தோற்றம் :- 05.06.1996
சிவலிங்கம் திருச்செல்வம் தோற்றம் :- 08.02.1972

மறைவு:-19.02.1997

பிறப்பவர் எல்லாம் இறப்பவர்
எனினும் சிறப்புயர்வுற்றோர் - என்றும்சிந்தையில் இருப்பர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்
அம்மா, அக்கா, அத்தான்,
அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.

சி.தேவகுஞ்சரம்,
கதிரிப்பாய், அச்சுவேலி.



## மரண அறிவித்தல்



அமரர் விநாயகமூர்த்தி சடாச்சரம்

மாதகலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி சடாச்சரம் அவர்கள் கடந்த 16.02.2024 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் அமரர் விநாயகமூர்த்தி-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் அமரர் தாமோதரம்பிள்ளை-செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், அமரர் சிவலட்சனம் அவர்களின் அன்புக் கணவரும், அமரர் தவபாக்கியம், அமரர் சிவசோதி, அமரர் சிவானந்தம், கற்கண்டு, சுப்பிரமணியம், அமரர் ஆனந்த நடராஜா, அமரர் தயானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் சிவனாமம், சிவனேஸ்வரியம்மா, சிவம் ஆகியோரின் மைத்துனரும், அமரர் இலட்சுமனன், இலட்சுமன சேகர், இலட்சுமனதாஸ், கனகலட்சுமி, செல்வலட்சுமி, குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பம், இராஜினி, தர்சினி, குணரத்தினம், ராஜி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2024) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக போதி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தொடர்பு இலக்கம்
077 209 1972
(Jaan)


தகவல்:
குடும்பத்தினர்.



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா

## மரண அறிவித்தல்

தோற்றம்
23
03
1942



மறைவு
16
02
2024

மகேஸ்வரி பொன்னுத்துரை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி பொன்னுத்துரை அவர்கள் கடந்த (16.02.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர் - பூமணி, மனோன்மணி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், வேலுப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், இராசரத்தினம், குணரத்தினம், லோகரத்தினம், புஸ்பராணி, தெய்வேந்திரம், காலஞ்சென்ற வரதராஜா, மற்றும் கஜேந்திரன், மனோரஞ்சிதம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தினிதேவி, சாரதாதேவி, பத்மாவதி, குலேந்திராதேவி, சிவகுமார், பகீரதி, கிருஸ்ணகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், குகபாலன், ஸ்ரீதரன், துரைராசா, காலஞ்சென்ற சிவகுமார், சூரியமாலா, வேல்நாதன், அமிர்தவர்சினி, டெய்சிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகீசன், சாகீசன், சிந்துஜன், ஜெனார்த்தனி, றம்மிஜன், அகல்யன், அபிராம், கிருஷன், பவன், கவீனா, கயூரி, தேனுகா, கிருஷாந்தன், சாருஜன், வினோஜன், கிருத்திகா, திஷான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]
[illegible]ரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்,
077 720 0680


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையால் கொல்லப்பட்ட மீனவர்களின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், பெப். 19

1994ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி மீன்பிடியில் ஈடுபட்ட கட்டைக்காட்டைச் சேர்ந்த 10 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொலை செய்த 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

சுண்டிக்குளம், தொடுவாய் வாய்க்கால் கடலில் கட்டுமரங்களில் மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நேற்று பி.ப. 3.30 மணியளவில் கட்டைக்காடு சென். மேரிஸ் மைதானத்தில் ஆரம்பமான நினைவேந்தல் நிகழ்வின்போது சுடரை கட்டைக்காடு பங்குத் தந்தை அமல்ராஜ் ஏற்றிவைத்தார். அதன்பின்பு உயிரிழந்த பத்து மீனவர்களினதும் உறவுகள் ஈகச்சுடரை ஏற்றி இறந்த தமது உறவுகளுக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர். இறுதி நிகழ்வாக நட்புரீதியான உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றதோடு, வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (ஓ-27)



## இந்திய இராணுவத்தினருக்கு பலாலியில் தூதுவர் அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 19

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு வருகை தந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதேவேளை - பலாலியில் அமைந்துள்ள இந்திய இராணுவத்தின் தூபிக்கும் தூதுவர் நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்தினார். (அ-ஒ-66)

## ஈரானிய அமைச்சர் இலங்கை வருகை

கொழும்பு, பெப். 19

ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் மூன்று நாள்கள் பயணமாக இலங்கைக்கு இன்று திங்கட்கிழமை வருகை தரவுள்ளார். தனது பயணத்தின்போது ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடனும் ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமீர் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார். ஈரானிய வெளியுறவு அமைச்சருடன் ஈரான் ஜனாதிபதி செயலக அதிகாரிகள், வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் மற்றும் வலுசக்தி அமைச்சு அதிகாரிகள் ஆகியோரும் வரவுள்ளனர். (அ-ஒ-6)

### நிறைவேற்றதிகார...

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கடந்த வியாழக்கிழமை கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலை உரிய காலத்தில் நடத்தாமல் இருப்பதற்காக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் யோசனையைக் கையில் எடுத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியிருந்தார். நிறைவேற்று அதிகார ஒழிப்புத் தொடர்பில் ஆளும் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவும் சாதகமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. இந்த நிலையிலேயே ஆளும் கட்சியினருடனான சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க, "ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும் எண்ணம் எனக்கு இல்லை. எதிர்க்கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. அவர்களில் ஒரு அணியினர் தான் தமது ஊடக நண்பர்களிடம் இப்படியான கட்டுக்கதைகளை அவிழ்த்து விடுகின்றனர். அவர்கள் தமது பரப்புரைக்கு எனது பெயரைப் பயன்படுத்துகின்றனர். எதிர்க்கட்சியினரை விட எமது மக்கள் தெளிவாக உள்ளனர். இப்போது அவசரமாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வேண்டிய தேவை எதுவுமில்லை" என்று கூறியுள்ளார். (அ-ஒ-6)

### ஐஸ்...

தெல்லிப்பழை, கிளானையைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞர் முன்னர் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர் எனவும், கடந்த 6 மாதங்களாக அதிலிருந்து விடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த ஒருவாரமாகவே வேலைக்குச் சென்று வந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் நண்பர் ஒருவருடன் அருகிலுள்ள வீடொன்றுக்குச் சென்று அங்கு உயிர்கொல்லிப் போதைப்பொருளைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகின்றது. சிறிது நேரத்தில் தாயாருக்கு அழைப்பெடுத்த இளைஞன், நெஞ்சுக்குத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தாயார் சில நிமிடங்களில் அங்கு சென்றபோது இளைஞன் கீழே விழுந்து கிடந்துள்ளார். மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோதும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்றுப் பரிசோதனையில் இளைஞன் உயிர்கொல்லி ஐஸ் மற்றும் ஹெரோயின் பயன்படுத்தியமை உறுதியாகியுள்ளது. மேலும் இளைஞனுடன் சென்ற நண்பனை காங்கேசன்துறைப் பொலிஸார் கைது செய்து மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தியுள்ளனர். அவரும், உயிர்கொல்லி ஹெரோய்ன் மற்றும் கஞ்சா பயன்படுத்தியமை மருத்துவப்பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் இறப்புத் தொடர்பான திடீர் இறப்பு விசாரணைகளை வலி. கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஒ-5-26)

### குடும்பத்தலைவர்...

உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையான இவர் கடந்த ஒருவாரமாக வீட்டாரிடம் உயிர்கொல்லிப் போதைப் பொருள் கொள்வனவுக்குப் பணம் கோரியுள்ளார். வீட்டார் வழங்கவில்லை. இந்த நிலையிலேயே நேற்றையதினம் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் என்று விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ஒ-26)

### சிறுமியைக்...

சிறுமியைக் காணவில்லை என்று நேற்றுக்காலை அவரது வீட்டார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். சிறுமியும், இளைஞனும் காதலித்து வந்தனரென வும், பெற்றோர் சம்மதிக்காததால் இருவரும் வவுனியாவுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டிருந்தனர் எனவும் கூறப்படுகின்றது. வவுனியா செல்வதற்கான பேருந்து கிடைக்காமையால் இளைஞர், அந்தச் சிறுமியை அழைத்துக்கொண்டு தனது வீட்டுக்குச் சென்றுள்ளார். இளைஞனின் வீட்டார், இதுகுறித்து சிறுமியின் வீட்டாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்தே சிறுமியைக் கடத்தினாரென இளைஞன் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-5-26)

### யாழ்ப்பாணத்தில்...

மதுபோதையில் வாகனம் செலுத்தியமைக்கு 300 வழக்கும், வீதி சமிக்ஞைகளைப் பின்பற்றாமைக்கு எதிராக 307 வழக்குகளும், போக்குவரத்துக் குற்றங்களுக்கு 2 ஆயிரத்து 351 வழக்குகளும், வேறு போக்குவரத்து மீறல் தொடர்பில் 2 ஆயிரத்து 259 வழக்குகளுமாக மொத்தமாக 5 ஆயிரத்து 227 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பொலிஸாரால் ஆயிரத்து 381 வழக்குகளும், சாவகச்சேரி பொலிஸாரால் 901 வழக்குகளும், ஊர்காவற்றுறை பொலிஸாரால் 344 வழக்குகளும், சுன்னாகம் பொலிஸாரால் 916 வழக்குகளும், மானிப்பாய் பொலிஸாரால் 191 வழக்குகளும், கோப்பாய் பொலிஸாரால் 641 வழக்குகளுக்கும், கொடிகாமம் பொலிஸாரால் 747 வழக்குகளும், வட்டுக்கோட்டை பொலிஸாரால் 32 வழக்குகளும், நெடுந்தீவு பொலிஸாரால் 74 வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (அ-ஒ-26)

### பொதுத்தேர்தல்...

நாடு இன்னும் இருள்சூழ்ந்த பாதையில் தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் தீர்க்கமானது. இதனால் முன்கூட்டியே ஆட்சியாளர்களால் தேர்தல் நடத்தப்படலாம். அது உள்ளூராட்சிசபை, மாகாணசபைத் தேர்தலாக இருக்காது.

பொதுத்தேர்தலாகவே அமையும். அந்தத்தேர்தலில் யார் வெற்றிபெறுவார்கள் என்பதும் தெரியாது. ஆனால், இந்த நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவருவதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய ராஜபக்சக்கள் நிச்சயம் துடைத்தெறியப்படுவார்கள்.

பொதுஜன பெரமுனக் கட்சிக்கு 9 வீத வாக்குகள் மட்டுமே உள்ளது. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மட்டுமே ஒரு ஆசனத்தை பெறக்கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது - என்றார். (அ-ஒ-44)

### இந்திய...

லாளர் சந்திப்பின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"தற்போது இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். தமது மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக இலங்கைக் கடற்பரப்புக்குச் சென்றார்கள் எனவும், கைது செய்யப்பட்ட அவர்களை விடுவிக்குமாறும் கோரிக்கை விடுகிறார்கள். நாங்கள் அவர்களிடம் ஒன்றைக் கூற விரும்புகிறோம். நீங்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி வருவது குற்றம் மட்டுமல்லாது எமது மீனவர்களின் வாழ்க்கையையும் அழிக்கிறீர்கள். இந்திய மீனவர்களின் வருகையை நிறுத்துமாறு கோரி யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த உள்ளோம்" - என்றனர். (அ-ஒ-27)

### மூலக்கிளை...

கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

"வழக்குகளை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றோம். நீதிமன்றத்தின் மேற்பார்வையில் அனைத்து மூலக்கிளைகளினதும் தெரிவுகள் மீள நடத்தப்பட்டு அதற்கு அமைவாகத் தலைவர் தெரிவையும் மீள நடத்துவதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன்" என்று குறிப்பிட்டார். (அ-ஒ-5-125)

### மின்கட்டணம்...

முடிவடைந்துள்ளது. புதிய மின்கட்டண மறுசீரமைப்புத் திட்டத்தின்படி மின்கட்டணம் இம்மாதம் முதல் 3.34 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் 42 நாடுகளின் அமைச்சர்கள்

கொழும்பு, பெப். 19

ஐ.நா. உணவு விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு இன்று முதல் 22ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளமையால் 42 நாடுகளின் விவசாய அமைச்சர்கள் வருகை தந்துள்ளனர்.

(அ-ஓ-6)

**காணி விற்பனைக்கு**

புலோப்பளை.
பளையில் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு :-
076 564 7848

(CS 534001) J-2

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் தேசியக் கல்வியியல் கல்லூரிக்கு பின்புறமாக கண்ணகை அம்மன் கோவிலுக்கு தெற்கு புறமாகவும் வெள்ளெருக்கு பிள்ளையார் கோவிலிற்கு செல்லும் வீதியில் நல்ல அயல் சூழலில் 6 பரப்பு சதுரக் காணி விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு: 076 654 5987

**GROUP CLASS & PERSONAL CLASS**

Tamil & English Medium

**PHYSICS**

Kokuvil

Contact No: 075 919 8050

**நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான ஆட்சேர்த்தல்**

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

வயது எல்லை 50 வயதிற்குட்பட்டவர்கள்

மேலதிக தகவல்களுக்கு 0761000046

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி

யாழ் அரசினர் பொது வைத்தியசாலை நலன்புரிசங்கம்
யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

**மாபெரும் வேலை வாய்ப்பு**

கிளிநொச்சி, முல்லை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு அரிய சந்தர்ப்பம் உடன் தொடர்பு கொள்ளவும்.

- இடம் : Tilko Hotel
- வயது எல்லை : 21-36
- தகமை : A/L

(CS 27963) V-1

Whats App No: 075 910 6973

**வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள்**

DHL

சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528

**அகரம் உயர்நிலைக் கல்லூரி**
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

ACADEMIC YEAR 2024

தமிழ் மொழி மூலம்; English Medium

Class Started on
19.02.2024
Monday @ 03.20 pm

"Aharam, The prosperous future of our nation's children".

**அகரம் உயர்நிலைக் கல்லூரி**
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன்துறைச்சாலை
மல்லாகம் | கொக்குவில்

புதிய கல்வி ஆண்டு 2024


தமிழ் மொழி மூலம்; English Medium

ஆரம்பம் :
19.02.2024
மாலை-3.00 மணி

"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்".

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 11 . 1932



மறைவு 17 . 02 . 2024

### பொன்னுத்துரை சரஸ்வதி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் குமரகோட்டத்தை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சரஸ்வதி அவர்கள் கடந்த (17.02.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 946 7181

(CS 27959) S-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 09 . 1930



மறைவு 17 . 02 . 2024

### குலசேகரம்பிள்ளை இராசலட்சுமி

காரைநகர், களபூமி, வளுப்போடையைச் சேர்ந்த குலசேகரம் பிள்ளை இராசலட்சுமி நேற்று முன்தினம் (17.02.2024) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு குலசேகரம்பிள்ளையின் அன்பு மனைவியும், சோமசுந்தரம், கனகசுந்தரம், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம், மற்றும் சிவஞானசுந்தரம் (இலங்கை வங்கி) ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 71/6, அரசடி வீதி, யாழ்ப்பாணத்தில் நாளை (20.02.2024) செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

71/6, அரசடி வீதி, வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்
077 904 2178

(CS54026) N-1

**விசா ஆலோசனை மற்றும் Show Money வசதிகள்**

கனடா நாட்டிற்கான விசா ஆலோசனை மற்றும் சகல நாடுகளுக்குமான Show money வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

074 173 7684

(CS54020) J-1

**வேலையாட்கள் தேவை**

கடை ஒன்றிற்கு
கணினி தொடர்பான
அறிவுள்ள ஆண் / பெண்
வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-
076 586 4967
070 606 5504



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org